1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No.107/2018

06.08.2024 வா.சா. 2 திரு.ஆவுடையப்பன்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அதை தாக்கல் செய்யலாமா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துவிட்டேன். அழைப்பாணை பெற்றதும் வாதியின் வழக்கறிஞரை பார்த்தேன் என்றால்சரிதான். அவர் எனக்கு முதல் விசாரணை நிருபண வாக்குமூலம் தயார் செய்து கொடுத்தார் என்றால்சரிதான். அந்த விவரங்கள் வழக்கறிஞர் சொல்லி தயாரிக்கபட்டது என்றால் எனக்கு தெரியும். வாதியின் மகன் எங்கள் ஊரில் தலையாரியாக உள்ளார் என்றால்சரிதான். சண்முகமும் நானும் நெருங்கிய நண்பர் என்றால் இல்லை.
2. நான் அமைப்பு சாரா தொழிலாளர் என்பதற்கு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் ஊர் எங்கள் ஊருக்கு மேற்கு பக்கம் உள்ளது என்றால்சரிதான். தச்சநல்லூர் எங்கள் ஊருக்கு வடக்கு பக்கம் உள்ளது. நான் பொருள் வாங்க வர வேண்டும் என்றால் தச்சநல்லூர் வர வேண்டும் என்றால் ஸ்ரீபுரத்திற்கும் வருவோம். அது தெற்கு பக்கம் உள்ளது. ஊருடையார்புரத்திலிருந்து நான் மேற்கு பக்கம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் மகனும் நானும் நண்பர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் நிலைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.